இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 345 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆடி 09 – வியாழக்கிழமை 25 ஜுலை 2024 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 345 : Thiruvalluvar Year - 2055 - Aadi 09 - Thursday 25 July 2024 - Dak 12 Pages ₹ 5.00

## மாநிலத்தின் நலன்கள் முழுமையாகப் புறக்கணிப்பு! ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை

# தமிழ்நாட்டுக்கு இழைக்கப்பட்ட மாபெரும் துரோகம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடுக்கடுக்கான ஆதாரங்களுடன் குற்றச்சாட்டு!

**சென்னை, ஜூலை 25 - ‘ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை - தமிழ்நாட்டிற்கு இழைக்கப்பட்ட மாபெரும் துரோகம்’ என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் (23.7.2024) தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கை மீது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பின்வரும் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

1. ஒரு நாட்டின் நிதிநிலை அறிக்கை என்பது இந்தியத் திருநாட்டின் அனைத்து மாநிலங்களுக்கும் உரிய பங்கினைப் பகிர்ந்தளித்து நாடு முழுவதும் சமச்சீரான வளர்ச்சியை உருவாக்கிட உதவுவதுடன், நாட்டில் வாழும் கடைக்கோடி மனிதர்களின் வாழ்வை மேம்படுத்தும் கொள்கைப் பிரகடனமாகவே இதுவரை இருந்து வந்திருக்கிறது. ஆனால், இந்த ஆண்டிற்கான ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை, ஒட்டு மொத்த இந்திய நாட்டிற்கான நிதிநிலை அறிக்கையாகத் தெரியவில்லை. மாறாக, அரசியல் காரணங்களுக்காக பீகார் மற்றும் ஆந்திரா மாநிலங்களை ஆளுவோருடன் மேற்கொள்ளப்பட்ட கூட்டணி ஒப்பந்தம் போன்றே உள்ளது. அரசியல் சுய லாபங்களுக்காக குறிப்பிட்ட சில மாநிலங்களுக்கு மட்டும் நிதியை தாராளமாக அள்ளிக் கொடுத்தும், மதவாத அரசியலை தொடர்ந்து புறக்கணிக்கின்றன என்ற ஒரே காரணத்திற்காக நாட்டின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்து வரும் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் மீது வன்மத்தைக் கக்கிடும் வகையில் இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கை அமைந்திருப்பது இந்திய மக்களாட்சி மற்றும் கூட்டாட்சித் தத்துவங்களைச் சிதைத்திடும் வகையில் அமைந்துள்ளது. நிதிநிலை அறிக்கை மூலம் தேர்தல் கணக்கை தீர்த்துக்கொள்ள ஒன்றிய பாரதிய ஜனதா கட்சி அரசு நினைத்திருப்பது வேதனைக்குரியது. தமிழ்நாட்டு மக்களை பாதிக்கக்கூடியது.

2. சமீபத்தில் சந்தித்த இரண்டு தொடர் பேரிடர் இழப்புகளைச் சீரமைக்க பேரிடர் நிவாரணத்தை வழங்க தமிழ்நாடு அரசு தொடர்ந்து ஒன்றிய அரசை வலியுறுத்தியபோதிலும், இந்த ஒன்றிய வரவுசெலவுத் திட்டத்திலும் போதிய நிதி வழங்கப்படவில்லை. 37,000 கோடி ரூபாய் பேரிடர் நிவாரணமாக வழங்குவதற்கான ஒரு விரிவான அறிக்கையினை தமிழ்நாடு அரசு சமர்ப்பித்த நிலையில், ஒன்றிய அரசு சுமார் 276 கோடி ரூபாய் மட்டுமே இதுவரை வழங்கியுள்ளது. அதுவும் சட்டரீதியாக வழங்கப்பட வேண்டியது தான். ஆனால், இன்று உத்தரகாண்ட்,



சிக்கிம், இமாச்சலப் பிரதேசம் மற்றும் அஸ்ஸாம் போன்ற மாநிலங்கள் மட்டுமின்றி, பீகார் மாநிலத்திற்கு மட்டும் 11,500 கோடி ரூபாய் பேரிடர் தடுப்புப் பணிகளுக்காக வழங்கப்பட உள்ளது. இது, தமிழ்நாட்டு மக்களுக்குச் செய்யும் மிகப்பெரிய அநீதியாகும்.

### தமிழ்நாட்டுக்கு பேரிடர் நிவாரணநிதி தரவில்லை!

3. சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை மூன்றாண்டுகளுக்கும் முன்பாக ஒன்றிய அரசு அறிவித்த நிலையிலும், சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்காக எந்தவொரு நிதியும் இதுவரை வழங்கவில்லை. இது, சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் செயல்பாட்டினைப் பெரிதும் பாதித்து, சென்னை மக்களுக்கு கடும் சிரமத்தை ஏற்படுத்தி வருகிறது. மேலும், கோவை மற்றும் மதுரை நகரங்களுக்கான மெட்ரோ இரயில் திட்டங்கள் குறித்த எந்த அறிவிப்பும் இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லை.

### தமிழ்நாட்டுக்கு புதிய திட்டங்கள் ஏதுமில்லை!

4. ஒன்றிய அரசு நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டிற்கென எந்தவொரு புதிய இரயில் திட்டங்களோ, நெடுஞ்சாலைத் திட்டங்களோ இடம்பெறவில்லை என்பது மிகுந்த ஏமாற்றத்தைத் தருகிறது.

5. பிரதம மந்திரியின் வீடு வழங்கும் திட்டத்தில், அடுத்த 5 ஆண்டுகளில், 3 கோடி வீடுகள் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், ஒரு வீட்டிற்கான மதிப்பீட்டினை உயர்த்துவது குறித்து எந்த அறிவிப்பும் இல்லை. தற்போது, நகர்ப்புரப் பகுதிகளில் கட்டப்படும் வீடுகளில், ஒன்றிய அரசின் பங்கு 1.5 இலட்சம் ரூபாயாகவும்,

இதில் மாநில அரசால் சுமார் 12 இலட்சம் முதல் 14 இலட்சம் ரூபாய் வரை ஒரு வீட்டிற்கு செலவிடப்படுகிறது. எனவே, ஒன்றிய அரசின் பங்கினை உயர்த்தாமல், வீடுகளின் எண்ணிக்கையை உயர்த்துவது, மாநில அரசுகளுக்கு கூடுதல் நிதிச்சுமையை ஏற்படுத்துவதாகவே அமையும். திட்டத்திற்கு பிரதமரின் பெயரை வைத்துக்கொண்டால் மட்டும் போதுமானதல்ல. அதற்கேற்றால்போல நிதியும் வழங்கப்பட வேண்டும் என்றுதான் எதிர்பார்க்கிறோம்.

தொடர்ச்சி 4-ஆம் பக்கம்

## ஒன்றிய பட்ஜெட்டில் ‘இந்தியா’ கூட்டணி ஆளும் மாநிலங்கள் புறக்கணிப்பு!

# நாடாளுமன்ற வளாகத்தில் ‘இந்தியா’ கூட்டணி எம்.பி.க்கள் போராட்டம்!

## ஒன்றிய அரசைக் கண்டித்து கண்டன முழக்கம் - கழக எம்.பி.க்கள் தமிழில் முழக்கம்! நாடாளுமன்றத்திலிருந்து ‘இந்தியா’ கூட்டணிக் கட்சியினர் வெளிநடப்பு!

புதுடெல்லி, ஜூலை 25 - நிதிநிலை அறிக்கையில் இந்தியா கூட்டணி கட்சிகள் ஆளும் மாநிலங்கள் புறக்கணிக்கப்பட்டதைக் கண்டித்து நாடாளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, தெலுங்கானா போன்ற இந்தியா கூட்டணி கட்சிகள் ஆளும் மாநிலங்கள் முற்றிலுமாக புறக்கணிக்கப்பட்டுள்ளன. இதற்கு இந்தியா கூட்டணி கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

மேலும் ஒன்றிய அரசைக் கண்டித்து நாடாளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி கட்சிகள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டன. காங்கிரஸ், தி.மு.க., திரிணாமுல் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகளின் எம்.பி.க்கள் இந்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

### சோனியாகாந்தி - ராகுல்காந்தி பங்கேற்பு!

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, அக்கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் சோனியாகாந்தி, எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி உள்ளிட்டோர் போராட்டத்தில் கலந்து கொண்டனர். தி.மு.க. சார்பில் நாடாளுமன்ற இரு அவைகளின் கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, மக்களவை கழகக் குழு துணைத் தலைவர் தயாநிதி மாறன், மக்களவை கழக கொறடா ஆ.ராசா, மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா, துணைத் தலைவர் சண்முகம், கொறடா வில்சன், இரு அவைகளின் கழகக் குழு பொருளாளர் ஜெகத்ரட்சகன் உட்பட தி.மு.க. எம்.பி.க்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

அப்போது, பட்ஜெட்டில் எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்கள் புறக்கணிக்கப்பட்டதைக் கண்டித்து, கைகளில் பதாகைகளை ஏந்தி கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

### கருப்பு உடையில் கழக உறுப்பினர்கள்!

போராட்டத்தில் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருப்பு உடை அணிந்து பங்கேற்றனர். பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த ஒன்றிய அரசைக் கண்டித்து தமிழ்நாடு எம்.பி.க்கள் தமிழில் முழக்கமிட்டனர். வஞ்சிக்காதே, வஞ்சிக்காதே, தமிழ்நாட்டை வஞ்சிக்காதே என ஒன்றிய அரசைக் கண்டித்து தமிழ்நாட்டு எம்.பி.க்கள் முழக்கம் எழுப்பினர். பழிவாங்காதே, பழிவாங்காதே, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களை பழிவாங்காதே என்றும் முழக்கங்களை எழுப்பினர்.

பட்ஜெட்டில் இந்தியா கூட்டணி ஆளும் மாநிலங்கள் புறக்கணிக்கப்பட்டதைக் கண்டித்து நாடாளுமன்ற இரு அவைகளையும் ஒத்திவைத்து விட்டு விவாதம் நடத்த வேண்டும் என ஒன்றிய அரசை இந்தியா கூட்டணி கட்சிகள் வலியுறுத்தியுள்ளன. இதுதொடர்பாக இரு அவைகளிலும் தி.மு.க. மற்றும் காங்கிரஸ் கட்சிகள் ஒத்திவைப்பு தீர்மான நோட்டீஸ் அளித்தன. பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டது தொடர்பாக இரு அவைகளிலும் விவாதிக்க வேண்டும் என நோட்டீஸில் தி.மு.க. வலியுறுத்தியது. ஆனால், விவாதம் நடத்த இரு அவைகளிலும் அனுமதி மறுக்கப்பட்டது.

இதனைக் கண்டித்து மக்களவையில் இருந்து தி.மு.க., காங்கிரஸ் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகளின் எம்.பி.க்கள் வெளிநடப்பு செய்தனர். அப்போது ஒன்றிய அரசைக் கண்டித்து முழக்கங்களை எழுப்பினர்.

இதேபோன்று மாநிலங்களவையிலும் தி.மு.க., காங்கிரஸ் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகளின் எம்.பி.க்கள் வெளிநடப்பு செய்தனர். பட்ஜெட்டில் தமிழ்நாடு உட்பட இந்தியா கூட்டணி கட்சிகள் ஆளும் மாநிலங்கள் புறக்கணிக்கப்பட்டதற்கு எதிராகவும், ஒன்றிய அரசைக் கண்டித்தும் முழக்கங்களை எழுப்பினர்.

பதவி காக்கும் பட்ஜெட்

